# நாவைப் பேண சில வழிகள் – 3

التوجيهات احفظ اللسان

Moulaviyya M.Y.Maziyya BA (Hons)

## 8) பிரார்த்தனை செய்தல்:-

அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வதானது ஒரு அடியான் அவனிடம் ஒதுங்கிவிடுவதாகும். எனவே, தனது நாவைப் பாதுகாத்துத் தருமாறு அவனிடம் கையேந்திப் பிரார்த்தனை செய்ய வேண்டும். துஆவின் போது, அது அங்கீகரிக்கப் படுகின்ற நேரங்களையும், அதற்குரிய ஒழுங்கங்களயும் கவனத்திற் கொள்ள வேண்டும். உள்ளத்தினாலும் நாவினாலும் பிராத்திக்க வேண்டும். அல்லாஹ் பிரார்த்தனையை அங்கீகரிப்பான் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

யார் உளத்தூய்மையுடன் பிரார்த்தனையில் ஈடுபடுகின்றாரோ அவர் நேர்வழி பெறுவார், கேட்டவற்றையும் அடைந்துகொள்வார்.

## 9) மௌனமாயிருத்தல்:-

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஒரு அடியானுக்கு அல்லாஹ் அருள்புரிவானாக! அவன் (பேசினால்) நல்லதைப் பேசி நன்மையடைந்துகொள்கிறான். அல்லது கெட்டவார்த்தை பேசாது மௌனமாக இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றான்.

நூல்கள்: இப்னுல் முபாரக் :அஸ்ஸுஹ்த்

பைஹகீ: ஷுஅபுல் ஈமான்

அல்பானி: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா : (855)

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

யார் மௌனமாக இருக்கின்றாரோ அவர் தன்னைப் பாதுகாத்துக் கொண்டார்.

(நூல்கள் : திர்மிதி, தாரமீ, அஹ்மத்)

அல்பானீ: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா (536)

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நிச்சயமாக நீ வாய்மூடி இருக்கின்றவரை பாதுகாப்பாக இருப்பாய்! எனவே, நீ பேசிவிட்டால் அது உனக்கு பாதகமாகவோ, சாதகமாகவோ எழுதப்பட்டுவிடுகின்றது.

மேலும் அவர்கள் கூறினார்கள்.

யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசம் கொள்கின்றாரோ அவர் நல்லதைப் பேசட்டும் அல்லது மௌனமாக இருந்து விடட்டும்

(நூல் : புகாரி: அல் அதபுல் முப்ரத் : அல்பானி: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா (1375))

ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரழி) அவர்கள் கூறியதாவது:

"அல்லாஹ்வின் தூதரே! குழப்பங்களிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான வழியாது?" என்று கேட்டேன் அதற்கவர்கள் "உன்னுடைய நாவை நீ கட்டுப்படுத்திக் கொள்வாயாக! உன்னுடைய வீட்டிலேயே நீ இருந்துவிடுவாயாக! உன்னுடைய பாவங்களுக்காக கண்ணீர் வடிப்பீராக ! (இவை குழப்பங்களிலிருந்து பாதுக்காக் கின்றன) என்று பதிலளித்தார்கள்."

நூல்கள்: அஹ்மத், திர்மிதீ

அல்பானீ: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா (890)

மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

உங்களில் ஒருவருக்கு கோபம் வந்துவிட்டால், அவர் மௌனமாக இருந்து விடட்டும்.

புகாரி: அல் அதபுல் முப்ரத்

அல்பானீ: ஸில்ஸிலா அஸ்ஸஹீஹா (1375)

மேற் கூறிய நபி மொழிகளைச் சிந்திப்பவர், குழப்பங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கும், ஈருலக நற்பயன்களை அடைந்து கொள்வதற்குமான ஒரே வழி "மௌனமாயிருத்தல்," தான் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்வார். ஏனெனில், பேசுகின்றவர், குழப்பங்களிலிருந்து தப்பிவிடுவார் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடவில்லை. அவர் தப்பவேண்டும் எனில் அதற்கு நிபந்தனைகள் இருக்கின்றன. அவையாவன.

A. அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்துடன் பேசுதல்.
B. பேச்சு சரீ அத்தின் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.

10) இறையச்சம், நன்னடத்தை போன்றவற்றைக் கடைப்பிடித்து, தமது நாவுகளைப் பேணுபவர்களுடன் தோழமை கொள்வார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நல்ல நண்பனுக்கும் தீய நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வைத்திருப்பவனும் கொல்லனின் உலையுமாகும்! கஸ்தூரி வைத்திருப்பவரிடமிருந்து உமக்கு ஏதெனும் கிடைக்காமல் போகாது! நீர் அதை விலைக்கு வாங்கலாம். அல்லது அதன் நறுமணத்தையாவது பெற்றுக் கொள்ளலாம்! கொல்லனின் உலை உதுவீட்டையோ, உமது ஆடையையோ எரித்துவிடும், அல்லது அவனிடமிருந்து கெட்டவாடையை நீர் பெற்றுக்கொள்வீர்.

நூல்: புகாரி: (2010)